அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்.234/2015
தேதி. 25.9.2015

## இராமநதி – ஜம்புநதி மேல்மட்டக் கால்வாய்
## தென்காசி – ஆலங்குளம் பகுதி மக்களின்
## 40 ஆண்டு கால கோரிக்கையை நிறைவேற்றியுள்ள
## மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி
## ச.ம.க.தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அறிக்கை

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 110 அறிவிப்பின் கீழ் எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களையும், தமிழகத்தின் தொழில் சமூக வளர்ச்சிக்கும் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கும், அரசு ஊழியர்களின் நலனிற்கும் தொடர்ந்து அறிவித்து வருகிறார்.*

*தென்காசி - ஆலங்குளம் வட்டாரப் பகுதிகளில் உள்ள ஜம்புநதி பாசன வசதி பெறும் கிராமங்கள் நிலத்தடி நீர் இல்லாமல் விவசாயத்திற்கும், குடிநீருக்கும் அவதிப்பட்டு வந்தார்கள். மழைநீரை நம்பியே பெரும்பான்மையான விவசாயம் நடைபெற்று வந்தது.*

### *இராமநதி - ஜம்புநதி*

*இந்நிலையில் இராமநதியில் உபரி நீராகச் செல்லும் தண்ணீரை இராமநதி அணையிலிருந்து மேல்மட்டக் கால்வாய் மூலம் ஜம்பு நதியில் இணைத்து கிடைக்கும் தண்ணீர் மூலம் மத்தளம்பாறை, திப்பனம்பட்டி, ஆவுடையானூர், தெற்கு கடையம், கீழ்கடையம், பொட்டல் புதூர், வெங்கடாம்பட்டி, மடத்தூர்,தெற்கு மடத்தூர், பண்டாரகுளம் உள்பட பல்வேறு கிராமங்கள் பயன் பெற வேண்டும்*

என்று ஏறத்தாழ 40 ஆண்டு காலமாக இப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்து வந்துள்ளனர்.

## புரட்சித் தலைவி

ஏற்கெனவே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இத்திட்டத்தை செயல்படுத்த பரிசீலிப்பதாக திருநெல்வேலிக்கு வருகை தந்தபோது அறிவித்து இருந்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு 2006 - 2011 ஆம் ஆண்டு வரை திமுக ஆட்சியில் இத்திட்டத்திற்கு எந்த விதமான முயற்சியும் எடுக்காதது மட்டுமின்றி, இத்திட்டம் நடைமுறை சாத்தியமற்றது என்ற வகையில் முடிவு செய்து கிடப்பில் போட்டு விட்டதாகத் தெரிகிறது.

மீண்டும் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சி ஏற்பட்ட பிறகு இத்திட்டம் மறுபரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதுடன், பொதுப் பணித்துறை அமைச்சர், முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு இத்திட்டம் செயல்படுத்துவதற்கான ஆய்வுகளை அரசு எடுத்துக் கொள்ளும் என்று சட்டமன்றத்தில் அறிவித்தார்.

இத்திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு பகுதி மக்களின் சார்பாகவும் சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையிலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் நேரிலும் சட்டமன்றத்திலும் கோரிக்கை வைத்து வந்துள்ளோம்.

இன்று தமிழக சட்டமன்றத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இராமநதியில் கிடைக்கும் உபரிநீரை ஜம்புநதிக்கு திருப்பிவிடும் திட்டத்தை 42 கோடி ரூபாய் செலவில் அறிவித்துள்ளது அளவில்லா மகிழ்ச்சியை அளித்துள்ளது.

இத்திட்டம் மூலம் 4050 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி வாய்ப்பு பெறும், 729க்கும் மேலான கிணறுகளுக்கு நீர் ஆதார வாய்ப்பு, பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு குடிநீர் ஆதாரம், 17 கண்மாய்களுக்கு நீர் வரத்து வாய்ப்பு என தென்காசி - ஆலங்குளம் வட்டாரத்தில் ஒரு புதிய விவசாய புரட்சி ஏற்படும் என்பது உறுதி.

## நிலம் கையகப்படுத்துதல்

இராமநதி - ஜம்புநதி மேல்மட்டக் கால்வாய்த் திட்டத்தை அறிவித்ததோடு மட்டுமின்றி இத்திட்டத்திற்காக 45.28 ஏக்கர் பட்டா நிலத்தை கையகப்படுத்துவதற்கும், திட்டத்தின் செயல்பாடுகளை விரிவாக ஆய்வு செய்வதற்கும் ரூபாய் 5 கோடியே 40 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு இருப்பதும் மிகுந்த பாராட்டுக்குரியது. தென்காசி - ஆலங்குளம் வட்டாரப் பகுதி மக்களின் நீண்ட கால கோரிக்கையை ஏற்று அவர்கள் வயிற்றில் பால் வார்த்த தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு தென்காசி தொகுதி மக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை காணிக்கையாக்குகின்றோம்.

## தென்காசி விரைவு நீதிமன்றம்

தென்காசியில் 32 லட்சத்து 97 ஆயிரம் ரூபாய் செலவில், மாவட்ட நீதிபதி பதவித்தரத்தில் ஒரு விரைவு நீதிமன்றம் அமைக்க ஆணைகள் பிறப்பித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியையும் பாராட்டுக்களையும் சமத்துவ மக்கள் கட்சி சார்பிலும் தென்காசி தொகுதி மக்கள் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்,



ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்